Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ் ®

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்


New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 161 | உள்ளூர் - 10.06.2026 | புதன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 161 | வெளியூர் - 11.06.2026 | வியாழன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**லட்சுமி தேவியின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்!**

**புதன்தோறும் கொட்டிக்கிடக்கும் வேலைவாய்ப்புகள்!**

**நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய்!**

**இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார்!**

## நேருவின் சாதனையை முறியடித்த பிரதமர் மோடி!

புதுடெல்லி, ஜூன். 10–

நாட்டின் நீண்ட கால பிரதமராக இருந்த நேருவின் சாதனையை பிரதமர் மோடி முறியடிக்கும் நிலையில் மாலை டில்லி பாரத் மண்டபத்தில் பிரமாண்ட கூட்டம் நடைபெற உள்ளது. தேஜ கூட்டணி ஆளும் 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முதல்வர்கள், மூத்த தலைவர்கள், பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பிற முக்கிய மத்திய அமைச்சர்களும் கலந்து கொள்கின்றனர்.



பிரதமர் மோடி தனது 12 ஆண்டு பதவிக்காலத்தை நிறைவு செய்துள்ள நிலையில் அவரது தலைமையின் கீழ் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பிரதமர் மோடிக்கு மத்திய அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளனர்.

**அமெரிக்கா வாழ்த்து!**

நீண்ட கால பிரதமர் பதவி வகித்த சாதனை படைத்த பிரதமர் மோடிக்கு அமெரிக்க செனட்டர் ஜான் கார்னின் வாழ்த்து தெரிவித்தார். அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த சாதனை படைத்த பிரதமர் மோடிக்கு வாழ்த்துகள். மூன்று முறை மக்களாட்சி ஆணையைப் பெற்று, 140 கோடி மக்களின் நம்பிக்கையின் மூலம் 4,399 நாட்கள் தலைமை தாங்கியுள்ளார்.

25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டது முதல் இந்தியாவை உலகின் மிக வேகமாக வளரும் முக்கியப் பொருளாதார நாடாக மாற்றியது வரை, பிரதமர் மோடியின் பதவிக்காலம் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதாக அமைந்துள்ளது. அமெரிக்கா–இந்தியா இடையிலான உறவு முன்னெப்போதையும் விட வலுவாக உள்ளது,' என்று குறிப்பிட்டுள்ளார்.

**மலேசியா பிரதமர் வாழ்த்து**

மலேசியப் பிரதமர் அன்வர் இப்ராஹிம், இந்தியாவின் மிக நீண்ட காலம் பிரதமராகப் பதவி வகித்த பிரதமர் மோடிக்குத் தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:இந்தியாவின் மிக நீண்ட காலம் பிரதமராகப் பதவி வகித்த வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல்லை எட்டிய பிரதமர் மோடிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

இந்தியாவின் வளர்ச்சி, செழிப்பு மற்றும் உலக அரங்கில் அதன் நிலையை மேம்படுத்துவதில் அவர் பல ஆண்டுகளாக ஆற்றிய அர்ப்பணிப்புள்ள பொதுச் சேவை மற்றும் தலைமைத்துவத்திற்கு இந்தச் சாதனை ஒரு சான்றாக விளங்குகிறது. மலேசியா, இந்தியாவுடனான தனது நெருங்கிய மற்றும் நீண்டகால நட்பை மதிக்கிறது.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதிலும், நமது மக்களுக்கு இடையே உறவை வலுப்படுத்த மேலும் ஆவலுடன் உள்ளேன். பிரதமர் மோடி தொடர்ந்து வெற்றி பெறவும், இந்திய மக்கள் தொடர்ந்து அமைதி, முன்னேற்றம் மற்றும் செழிப்புடன் வாழவும் வாழ்த்துகிறேன். இவ்வாறு அன்வர் இப்ராஹிம் கூறியுள்ளார்.

சிபிஆர் வாழ்த்து

இது குறித்து துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியதாவது: பாரதத்தின் பிரதமராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மிக நீண்ட காலம் தொடர்ந்து பதவி வகித்தவர் என்னும் வரலாற்றுச் சாதனை படைத்துள்ள பிரதமர் மோடிக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரலாற்றுச் சாதனை என்பது வெறும் பதவிக்காலத்தின் நீளத்தைக் குறிப்பது மட்டுமல்ல; மாறாக, நமது நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒரு மாற்றத்திற்கான யுகத்தைப் பிரதிபலிப்பதாகும்.

2047ம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய பயணத்தில், பிரதமர் மோடியின் தலைமை கோடிக்கணக்கான மக்களுக்கு உத்வேகத்தின் ஊற்றாகவும், வழிகாட்டும் சக்தியாகவும் திகழ்கிறது. மனிதகுல மேன்மைக்காக உழைக்கும் மகத்தான தலைவர்களை வரலாறு என்றும் மறப்பதில்லை.

அவர்கள் வரலாற்றில் யுகபுருஷர்களாக நிலைபெறுகிறார்கள். தனது தொலைநோக்குத் தலைமையாலும், அர்ப்பணிப்பு மிக்க அயராத உழைப்பாலும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்காட்டி,பிரதமர் மோடி தற்கால பாரதத்தின் 'யுக புருஷராக' திகழ்கிறார். இவ்வாறு சி.பி.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

## அண்ணாமலையின் புதிய சவால்!

# 'வீ த லீடர்ஸ்' உள்ளாட்சித் தேர்தலில்

## 22,000 இளம் வேட்பாளர்கள்!!

சென்னை, ஜூன். 10–

உள்ளாட்சித் தேர்தலில் 22 ஆயிரம் இளம் வேட்பாளர்களை களமிறக்க அண்ணாமலையின் 'வீ த லீடர்ஸ்' இயக்கம் திட்டமிட்டுள்ளது. அண்ணாமலையின் இந்த வியூகம் தமிழகத்தின் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்குப் புதிய சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.




தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை, கடந்த ஜூன் 5–ம் தேதி சமூக ஊடக நேரலை மூலம் தனது புதிய அரசியல் இயக்கமான 'வீ த லீடர்ஸ்' என்ற இயக்கத்தை பிரகடனப்படுத்தினார். அப்போது, அனைவரையும் அரசியலுக்கு கொண்டு வரவும், அறம் சார்ந்த அரசியலை முன்னெடுக்கவும் ஏதுவாக, கோவையில் 'அப்துல் கலாம்' பெயரில் நவீன அரசியல் பயிற்சி மையம்ஒன்று தொடங்கப்படும் என்றும், இந்த மையத்தில் பயிற்சி பெறும் நபர்கள், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் வேட்பாளர்களாகக் களம் இறக்கப்படுவார்கள் எனவும் அண்ணாமலை அறிவித்தார்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள இந்த 'வீ த லீடர்ஸ்', வரும் செப்டம்பர் மாதத்தில் அதிகாரப்பூர்வ அரசியல் கட்சியாக உருவெடுக்கும் எனத் தெரிகிறது. இதற்கான பெயர், சின்னம் மற்றும் கொடி வடிவமைப்புப் பணிகளில் அண்ணாமலை தீவிரமாக ஈடுபட்டுள்ளார். இந்நிலையில், அண்ணாமலையோடு பாஜகவின் முக்கிய நிர்வாகிகள் பலரும் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு இந்த புதிய இயக்கத்தில் இணைந்து வருகின்றனர்.

அந்த வகையில், இயக்கம் தொடங்கப்பட்ட 5 நாட்களில் 17 லட்சம் பேர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். இந்நிலையில், அண்ணாமலை வெளியிட்டுள்ள சில சுவாரசியமான புள்ளிவிவரங்கள் தமிழக அரசியலை உற்றுநோக்க வைத்துள்ளன. அதாவது, 'இந்த இயக்கத்தில் இணைந்துள்ள 17 லட்சம் பேரில் 25.2% பேர் 'ஜென்–ஸீ' எனப்படும் அடுத்த தலைமுறை இளைஞர்கள் ஆவர். வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் களம் காண இந்த இயக்கத்தைச் சேர்ந்த 60,370 உறுப்பினர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டுள்ளனர். எனவே, போட்டியிடத் தயாராக உள்ள இந்த 60,370 பேரில், 37.7% பேர் (அதாவது 22,760 பேர்) 'ஜென்–ஸீ' இளைஞர்கள்,' என அண்ணாமலை தெரிவித்துஉள்ளார்.

தவெக தலைவர் விஜய், எவ்வாறு 'ஜென்–ஸீ' மற்றும் இளம் வாக்காளர்களைக் குறிவைத்துத் தனது அரசியல் வியூகங்களை அமைத்தாரோ, அதே உத்தியை அண்ணாமலையும் கையில் எடுத்துள்ளார். தமிழகம் முழுவதும் உறுப்பினர் சேர்க்கையைத் தீவிரப்படுத்தி வரும் 'வீ த லீடர்ஸ்' இயக்கம், வரும் உள்ளாட்சித் தேர்தலில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் வேட்பாளர்களைக் களமிறக்கத் திட்டமிட்டிருப்பது, தமிழகத்தின் பாரம்பரிய அரசியல் கட்சிகளுக்குப் புதிய சவாலாக அமையும் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

## பாரதிராஜா உடலுக்கு முழு அரசு மரியாதை: விஜய் அறிவிப்பு!

சென்னை, ஜூன். 10–

'தமிழ்த் திரையுலகின் இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த மனவேதனையும் துயரமும் அடைந்தேன். கிராமியப் பின்னணியில் வாழ்வியல் உயிரோட்டத்துடன் பல வெற்றிப் படங்களை உருவாக்கி, தமிழ்த் திரைப்பட உலகில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் இயக்குநர் பாரதிராஜா.





தனது படைப்புகளுக்காக நாட்டின் உயரிய விருதான பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு தேசிய, மாநில விருதுகளைப் பெற்றவர். பல தலைமுறைக் கலைஞர்களை உருவாக்கிய அவரது பங்களிப்பு தமிழ்த் திரைப்பட வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும். இயக்குநர் இமயம் பாரதிராஜாவின் மறைவு, தமிழ்த் திரையுலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், திரைப்படத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கிறேன். திரைத்துறையில் பாரதிராஜாவின் பங்களிப்பைப் போற்றி, அஞ்சலி செலுத்தும் வகையில் அவரது இறுதிப் பயணத்திற்கு அரசு மரியாதை வழங்கப்படும்' இவ்வாறு தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் உடல் நலக்குறைவால் காலமான இயக்குநர் இமயம் பாரதிராஜா இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

## நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய்!

சென்னை, ஜூன். 10–

நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் விஜய் டெல்லி புறப்பட்டார்.



பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் டெல்லியில் நிதி ஆயோக் கூட்டம் நாளை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இதில் பங்கேற்பதற்காக இன்று காலை முதலமைச்சர் விஜய் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் டெல்லிக்கு புறப்பட்டார்.

முதலமைச்சர் விஜய் டெல்லி சென்றடைந்ததும் காங்கிரசின் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தியை சந்தித்து பேச உள்ளதாக கட்சி வட்டார தகவல்கள் கூறுகின்றன.

அதைத்தொடர்ந்து டெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் முதலமைச்சர் விஜய் கலந்து கொள்கிறார். இந்தக் கூட்டம், நாளை காலை மற்றும் பிற்பகல் என்று இரண்டு பிரிவாக நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு பின்னர் பிரதமர் நரேந்திர மோடி அளிக்கும் இரவு உணவில் முதலமைச்சர் விஜய் பங்கேற்கிறார். பின்னர், பிரதமர் மோடி, அனைத்து முதல்–மந்திரிகளுடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொள்வார். அதோடு நிதி ஆயோக் கூட்டம் நிறைவு பெறும்.

ஜூன். 11 இரவும் முதலமைச்சர் விஜய் டெல்லி யில் தங்குகிறார். 12–ந் தேதி காலையில் மத்திய மந்திரிகள் சிலரை சந்திக்கலாம் என்று கூறப்படுகிறது. பின்னர் அன்று பிற்பகல் 3 மணிக்கு தனி விமானம் மூலம் டெல்லியில் இருந்து புறப்படும் முதலமைச்சர் விஜய் மாலை 6 மணிக்கு சென்னை வந்தடைவார். டெல்லி பயணத்தின் போது ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதியை மரியாதை நிமித்தமாக சந்திக்க முதலமைச்சர் விஜய் நேரம் கேட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 10.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 27-ம் தேதி

# பெண்கள் பாதுகாப்பில் சமரசம் இல்லை!




தமிழக முதல்வர் விஜய் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை திட்டத்தை தொடங்கி வைத்தார்.. இந்த திட்டத்திற்கான லோகோ மற்றும் ரோந்து வாகனங்களையும் விஜய் அறிமுகம் செய்து வைத்தார்.. இந்த நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் விஜய் “ ஒரு சில நிகழ்ச்சிகள் தான் மனதுக்கு நெருக்கமாக இருக்கும்.. அதில் ஒன்று தான் இந்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தொடக்க விழா நிகழ்ச்சி.. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஜீரோ டாலரன்ஸ் தான்.. பயமின்றி பெண்கள், குழந்தைகள் வெளியில் நடமாட நடவடிக்கை எடுக்க இந்த திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது..

பெண்களுக்கு தொல்லை தருபவர்களை எச்சரிக்கிறேன், பெண்களுக்கு தொல்லை கொடுத்தால் உடனடியாக கடுமையாக தண்டிக்கப்படுவீர்கள்.. தண்டனை, குற்றப்பத்திரிகை, எல்லாமே விரைவாக செயல்படுத்தப்படும்.. இதில் நிரபராதிகள் யாரும் தண்டிக்கப்படக் கூடாது..

இந்த சிங்கப்பெண் சிறப்பு படைக்காக முதல்கட்டமாக ரூ.354 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.. இந்த திட்டத்திற்கு 2500 புதிய பணியிடங்கள் உருவாக்கப்பட உள்ளது.. இந்தியாவில் முதன்முறையாக ட்ரோன் மூலம் பேட்ரோல் உருவாக்கப்படும்.. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை காவலர்கள் ட்ரோன் மூலமும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள்..

பெண்களுக்கு எதிரான குற்றங்களை பார்க்கும்போது மனம் வலிக்கிறது; கண் கலங்குகிறது; பெண்களுக்கு எதிரான இந்த குற்றங்களுக்கு காரணம், போதைப்பொருள் நடமாட்டம் தான்..

போதைப்பொருள் நடமாட்டத்தை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும்; பல ஆண்டுகளாக கண்டுகொள்ளாமல் விட்டதால்தான், போதைப்பொருள் நடமாட்டம் பரவிவிட்டது. பெண்களின் பாதுகாப்பை தொந்தரவு செய்வோர் யாராக இருந்தாலும் சகித்துக்கொள்ள முடியாது.

உட்கட்டமைப்பு, பொருளாதார மேம்பாடு மட்டுமே ஒரு நாட்டுக்கு முக்கியமல்ல; பெண்கள் பாதுகாப்பும் முக்கியம்; பெண்களும் குழந்தைகளும் மரியாதையாக வாழ்கிறார்களா என்பதில் ஒரு அரசின் வெற்றி உள்ளது. பெண்களின் கனவுகளை நான் அறிவேன், நிச்சயம் நிறைவேற்றுவேன்.. நம் வீட்டு பெண்களின் கண்ணியம் காப்பது தான் நமது அரசின் முக்கிய கடமை.. அரசின் இலக்கு சரியாக இருந்தாலே செல்லும் பாதை சரியானதாக இருக்கும்..” என்று தெரிவித்தார்..

சிங்கப்பெண் அதிரடி சிறப்புப்படை முதல்வர் அலுவலகத்தின் நேரடி கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் இயங்குகிறது.. பெண் காவலர்களிடம் இருந்து சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படை காவலர்கள் தனித்து தெரியும் வகையில் சிறப்பு சீருடை வடிவமைக்கப்பட்டுள்ளது.. அடர் நீல நிற சட்டை, காக்கி பேண்ட், கருப்பு தொப்பி, தோள் பட்டையில் காக்கி பெல்ட், எடை குறைவான கருப்பு ஷூ என பிரத்யேக சீருடை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் நடக்க அதிக வாய்ப்புள்ள இடங்களை சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படை கண்காணிக்கும்.. பேருந்து ,ரயில் நிலையம், பள்ளி, கல்லூரி பெண்கள் அதிகம் கூடும் இடங்களை சிங்கப்பெண் அதிரடி படை கண்காணிக்கும்.. சென்னை உள்ளிட்ட அனைத்து காவல் மாவட்டங்கள், முக்கிய நகரங்களில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடி படை செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது..

முதல்வரின் இந்த திட்டம் வரவேற்க தக்கது. எதிர்காலத்தில் பெண்களுக்கான குற்றங்கள் தடுக்கப்படும் என நம்பப்படுகிறது

# எதிரிகளுக்கு பதிலடி தர இந்தியா தயார்; ஆயத்த நிலையில் 12 அணு ஆயுதங்கள்!



புதுடில்லி, ஜூன். 10–

நாட்டின் பாதுகாப்பு மற்றும் அணு ஆயுதக் கொள்கையில் முன் எப்போதும் இல்லாத வகையில் மிகப் பெரிய வரலாற்று சிறப்புமிக்க மாற்றம் அரங்கேறியுள்ளது. அண்டை நாடுகளின் அச்சுறுத்தல்களை சமாளிக்கும் வகையில் 12 அணு ஆயுதங்கள், உடனடியாக பயன்படுத்தக் கூடிய வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம், பாகிஸ்தான், சீனா போன்ற அண்டை நாடுகளால் நாளுக்கு நாள் அதிகரிக்கும் அச்சுறுத்தல் போன்ற காரணங்களால், நம் நாடு அணு ஆயுதக் கொள்கையில் வரலாற்று சிறப்புமிக்க மாற்றத்தை கொண்டு வந்து இருப்பதாக ஸ்டாக்ஹோம் அமைதி ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கை வெளியிட்டு உள்ளது.

அதில் கூறப்பட்டு உள்ளதாவது: வழக்கமாக அணு ஆயுதங்கள் பிரிக்கப்பட்டு, மிகுந்த பாதுகாப்புடன் தனித்தனியாக வைக்கப்பட்டு இருக்கும். ஆனால், தற்போதைய சூழலில், 12 அணு ஆயுதங்கள் ஏவுகணைகளுடன் பொருத்தப்பட்டு, தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தியா இப்படி செய்வது இதுவே முதல்முறை.

கடந்த ஆண்டில், இந்தியாவின் அணு ஆயுத கையிருப்பு சற்று அதிகரித்துள்ளது. மேலும், நீர்மூழ்கி கப்பலில் உள்ள ஏவுகணைகளில் குறைந்த எண்ணிக்கையிலான அணு ஆயுதங்கள் பொருத்தப்பட்டு, ரோந்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

‘முதலில் தாக்கக் கூடாது’ என்ற இந்தியாவின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. எனினும் எதிரிகளின் தாக்குதலுக்கு நொடிப் பொழுதில் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியா ஆயத்தமாக இருக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசோ அல்லது பாது காப்பு அமைச்சகமோ அதிகாரப்பூர்வமான விளக்கங்களை இதுவரை வெளியிடவில்லை.

# தமிழகம் முழுவதும் செயல்பாட்டுக்கு வரும் சிங்கப்பெண் போலீஸ் படைகள்!



சென்னை, ஜூன். 10–

சென்னையில், முதல்–அமைச்சர் விஜய் தொடங்கி வைத்த சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை தமிழகம் முழுவதும் 270 பிரிவுகள் தொடங்கப்படும். முதல்கட்டமாக 70 சிங்கப்பெண் படைகள் தமிழகம் முழுவதும் இன்று (புதன்கிழமை) இயங்கும். ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு சிங்கப்பெண் படை மிடுக்காக வலம் வரும். சென்னையில் 12 சிங்கப்பெண் படைகள் அதிரடி காட்ட போகிறார்கள்.

தாம்பரம், ஆவடி போலீஸ் கமிஷனரகங்களில் தலா 4 சிங்கப்படைகள் செயல்பாட்டில் இருக்கும். இதுதவிர இதர போலீஸ் கமிஷனரங்களில் தலா 2 சிங்கப்படைகள் இருக்கும். ஒவ்வொரு சிங்கப்படையிலும் 2 சப்–இன்ஸ்பெக்டர்களும், ஒரு போலீசாரும் முதலில் ரோந்து வருவார்கள். இதற்காக பிரத்யேகமாக 140 பெண் சப்–இன்ஸ்பெக்டர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். 420 பெண் போலீசார் இப்படையில் பணியாற்றுவார்கள்.

இவர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள். சிங்கப் படையில் முழுக்க, முழுக்க பெண் போலீசார்தான் பணியில் இருப்பார்கள். பெண் போலீசாருக்கு கார் டிரைவர் உள்ளிட்ட சில துணை பணிகளில் ஆண் போலீசார் உதவி செய்வார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள், சிங்கப்படையை தொடர்பு கொள்வதற்கு தனி ‘வாட்ஸ்–அப்’ குழுக்கள், செல்போன் எண்கள் போன்றவையும் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. தற்போது போலீஸ் அவசர கட்டுப்பாடு மையத்தின் 100 எண்ணை பொதுமக்கள் குறிப்பாக பெண்கள் பயன்படுத்தி கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் பயன்பாட்டுக்காக 319 4 சக்கர வாகனங்களும், 101 இருசக்கர வாகனங்களும் கொள்முதல் செய்யப்படும்.

# ஆசிரியர்களுக்கு பொதுமாறுதல் கலந்தாய்வு: விண்ணப்பப்பதிவு 15-ந்தேதி தொடக்கம்!




சென்னை, ஜூன். 10–

தமிழக அரசின் பள்ளிக்கல்வி இயக்குனர் எஸ்.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குனர் பி.ஏ.நரேஷ் ஆகியோர் மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் மற்றும் மாவட்ட கல்வி அதிகாரிகள் (தொடக்கக் கல்வி) ஆகியோருக்கு கூட்டாக அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அரசு பள்ளிகளில் அனைத்து வகை ஆசிரியர்களுக்கு 2026–2027–ம் கல்வி ஆண்டுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு நடத் தப்பட உள்ளது. இந்த கலந்தாய்வு கல்வி தகவல் மேலாண்மை முகமை (எமிஸ்) இணையதளம் வாயிலாக நடைபெறும். அந்த வகையில் மாறுதல் கலந்தாய்வுக்கான விண்ணப்பங்களை இந்த இணையதளத்தில் வருகிற 15–ந்தேதி முதல் 22–ந்தேதி வரை பதிவேற்றம் செய்துக்கொள்ளலாம். மாறுதலுக்கு விருப்பம் உள்ள அனைத்து வகை ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். தற்போது பணியாற்றும் பள்ளியில் ஓராண்டு பணி நிறைவடைந்து இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

பள்ளிக்கல்வித்துறையில் மாறுதல் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமை பட்டியல் வருகிற 30–ந்தேதி வெளியிடப்படும். கலந்தாய்வு ஜூலை 1–ந்தேதி முதல் 24–ந்தேதி வரை நடைபெறும். அதேபோல், தொடக்கக்கல்வித் துறையில் மாறுதலுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களின் முன்னுரிமை பட்டியல் வருகிற 25–ந் தேதி வெளியிடப்படும். கலந்தாய்வு ஜூலை 16–ந்தேதி வரை நடைபெறும். இவ்வாறு அவர்கள் கூறப்பட்டுள்ளது.

# இப்போதைக்கு இண்டி கூட்டணி வேண்டாம்: முதல்வர் விஜய் முடிவு!




சென்னை, ஜூன். 10–

‘தேசிய அளவிலான, ‘இண்டி’ கூட்டணியில், இப்போதைக்கு சேர வேண்டாம்’ என, தமிழக வெற்றிக் கழக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் முடிவெடுத்திருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 2024 லோக்சபா தேர்தலில், பா.ஜ.,வுக்கு எதிராக, காங்கிரஸ் தலைமையில், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து, ‘இண்டி’ கூட்டணியை உருவாக்கின; தி.மு.க., பிரதான கட்சியாக இடம் பெற்றது.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு பின், ‘இண்டி’ கூட்டணி கட்சிகள், தி.மு.க., அணியில் இருந்து விலகி, முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க., அரசுக்கு ஆதரவளித்துள்ளன.

அதிலும், முதல் கட்சியாக காங்கிரஸ் வெளியேறி, த.வெ.க., அமைச்சரவையிலும் இடம் பெற்றதால், காங்., மீது தி.மு.க., கடும் கோபத்தில் உள்ளது. இதனால், டில்லியில், நேற்று முன்தினம் நடந்த தேசிய அளவிலான ‘இண்டி’ கூட்டணி கூட்டத்தில், தி.மு.க., பங்கேற்கவில்லை.

த.வெ.க., மூத்த நிர்வாகிகள் சிலர் கூறியதாவது: தமிழகத்தில், தி.மு.க.,வுக்கு சிறுபான்மையினர் ஓட்டு கிடைக்க காரணமாக இருந்தது காங்கிரஸ். அதை உடைக்க திட்டமிட்ட த.வெ.க., தலைமை, தேர்தலுக்கு முன்பே காங்., உடன் பேச்சு நடத்தியது. அது கைகூடவில்லை. தற்போது காங்கிரசுடன், தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி அமைந்திருக்கிறது.

இதையடுத்து, ‘இண்டி’ கூட்டணி கூட்டத்தில் பங்கேற்க, த.வெ.க.,வுக்கும் அழைப்பு வந்தது. ஆனால், ‘இப்போதைக்கு ‘இண்டி’ கூட்டணி வேண்டாம்’ என்ற மனநிலையில், முதல்வர் விஜய் இருக்கிறார்.

வரும் 2029 லோக்சபா தேர்தலின்போது, மத்திய பா.ஜ., அரசை எதிர்த்து, அரசியல் செய்தால் போதும்; அதுவரை இணக்கமாக சென்று, தமிழகத்துக்கு தேவையான நிதியை பெற வேண்டும் என்பது தான், விஜயின் விருப்பமாக உள்ளது. அதற்கு மாறாக, ‘இண்டி’ கூட்டணியின் அரசியலுக்கு உதவ, விஜய்க்கு விருப்பம் இல்லை. அதனால் தான், முதல் ராஜ்யசபா ‘சீட்’டையும் காங்.,குக்கு கொடுத்தார்.

ஒருவேளை, த.வெ.க.,வில் ஒருவர் எம்.பி.,யாகி இருந்தால், பார்லிமென்டில், மத்திய அரசை எதிர்க்கும் சூழல் ஏற்படும். தற்போது, எம்.பி., இல்லாத நிலையில், அறிக்கையோடு அரசியல் முடிந்துவிடும். இதனால் தான், பா.ஜ.,வுக்கு எதிரான, ‘இண்டி’ கூட்டணியில் இணைவதை, விஜய் தவிர்த்துள்ளார். அதே நேரத்தில், ‘இண்டி’ கூட்டணி கட்சிகளோடு, தமிழகத்தில் அமைத்துள்ள கூட்டணிக்கு, விரைவில் பெயர் வைத்து, அரசியல் செய்ய திட்டமிடப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# அமெரிக்காவிற்கு ஈரான் மீண்டும் எச்சரிக்கை!



ஈரான், ஜூன். 10–

அமெரிக்க ராணுவத்தின் அப்பாச்சி ஹெலிகாப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, போர் பதற்றம் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், பாரசீக வளைகுடா பிராந்தியத்தை விட்டு அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போர்க்களத்தில் தோல்விகளைச் சந்தித்த போதிலும், ஈரானின் உறுதிநிலைபாடுகளை அமெரிக்கா மேலும் சோதிக்க நினைக்கிறது.

வரலாற்றில் இதற்கு முந்தைய காலக்கட்டங்களில் பாரசீக வளைகுடாவில் ஊடுருவும் வெளியாட்கள் கடுமையான விளைவுகளைச் சந்தித்துள்ளனர்.

அமெரிக்காவின் எந்தவொரு தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஈரானின் ஆயுதப் படைகள் பதிலடி கொடுக்கவல்லது.

அமெரிக்கா பாதுகாப்பாக இருக்க விரும்பினால் ஈரான் பகுதியை விட்டு வெளியேறுமாறு ஈரான் வெளியுறவு அமைச்சர் தனது X தள பதிவில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.


# இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய தடை விதித்த நேபாளம்!



காத்மாண்டு, ஜூன். 10–

இந்திய மாம்பழங்களை இறக்குமதி செய்ய நேபாளம் தடை விதித்து ள்ளது. பூச்சிகொல்லி மருந்து தெளிப்பதாக புகாரை அடுத்து இந்திய மாம்பழங்களுக்கு நேபாளம் தடை விதித்தது. நேபாளத்தில் வரத்து குறைவால் மாம்பழங்களின் விலை உயரும் நிலை ஏற்பட்டது.

நம் நாட்டின் மாம்பழங்கள் இறக்குமதிக்கு கிழக்காசிய நாடான ஜப்பான் சமீபத்தில் தடை விதித்தது. இந்த மாம்பழங்களை அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக அளவு பூச்சிக்கொல்லி மருந்துகளின் வீரியம் இருப்பதால் இந்த தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது நேபாளமும் இதே முடிவை எடுத்துள்ளது. எல்லை பகுதிகளில் அவற்றை தனிமைப்படுத்தும் வசதி இல்லாததாலும் இந்த தடை விதிக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்திய மாம்பழங்களுடன் போட்டியிட முடியாமல் திணறிய உள்நாட்டு மாம்பழ விவசாயிகளுக்கு இது ஊக்கம் அளிக்கும். நேபாளத்தின் தேவைக்கு உள்நாட்டு மாம்பழங்கள் மட்டும் போதாது என்றும், வரத்து குறைவால் மாம்பழம் விலை கணிசமாக உயரும் என்றும் வரத்து குறைவால் மாம்பழம் விலை கணிசமாக உயரும் என்றும் அச்சம் எழுந்துள்ளது.



# லட்சுமி தேவியின் கோபத்திற்கு ஆளாகாதீர்கள்!




பல வீடுகளில், வீட்டு வாசற்படியில் அமர வேண்டாம் என்று பெரியவர்கள் குழந்தைகளை இன்றும் எச்சரிக்கிறார்கள். பலர் இதை வெறும் சம்பிரதாயம் அல்லது மூடநம்பிக்கை என்று கருதினாலும், இந்து மரபுகள், கட்டிடக்கலை, புராண நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் வாசற்படிக்கு ஒரு சிறப்பான முக்கியத்துவம் உள்ளது. அதனால்தான் வாசற்படியில் அமர்வது நல்லதல்ல என்று பெரியவர்கள் கூறுகிறார்கள்.

வாஸ்து சாஸ்திரத்தின்படி, வாசற்படி என்பது வீட்டின் உட்புறத்திற்கும் வெளிப்புற உலகிற்கும் இடையிலான எல்லையாகும். இது வீட்டின் பாதுகாப்பு, தூய்மை மற்றும் நேர்மறை ஆற்றல்களின் அடையாளமாகக் கருதப்படுகிறது. வீட்டிற்குள் வரும் நல்ல ஆற்றல்களுக்கும், வெளியே செல்லும் எதிர்மறைத் தாக்கங்களுக்கும் இடையே வாசற்படி ஒரு பாதுகாப்புக் கவசமாகச் செயல்படுவதாக நம்பப்படுகிறது.

லட்சுமி தேவியின் நுழைவாயில்

இந்து நம்பிக்கைகளின்படி, செல்வத்தின் தெய்வமான லட்சுமி தேவி பிரதான வாசலின் வழியாகவே வீட்டிற்குள் நுழைகிறாள். எனவே, வாசற்படியைச் சுத்தமாகவும் தடைகள் இல்லாமலும் வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறது. வாசற்படியில் அமர்வது அல்லது அதன் மீது பொருட்களை வைப்பது செல்வச் செழிப்பின் ஓட்டத்தைத் தடுக்கும் என்று நம்பப்படுகிறது.

ஜோதிடம் என்ன சொல்கிறது?

சில ஜோதிடக் கருத்துகளின்படி, வாசற்படியில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதோ அல்லது நிற்பதோ அசுபமாகக் கருதப்படுகிறது. அவ்வாறு செய்வது மனக்கவலைகள், தேவையற்ற சிக்கல்கள் அல்லது வாழ்க்கையில் சிறிய தடைகளை ஏற்படுத்தக்கூடும் என்று நம்பப்படுகிறது. இருப்பினும், இவற்றை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட விஷயங்களாகக் கருதாமல், பாரம்பரிய நம்பிக்கைகளின் அடிப்படையிலான கருத்துகளாகவே பார்க்க வேண்டும்.

வாசற்படியில் அமர்ந்து ஏன் சாப்பிடக்கூடாது?

பழமையான நம்பிக்கைகள் மற்றும் சில மத நூல்களின்படி, வாசற்படியில் அமர்ந்து சாப்பிடுவது நல்லதல்ல. அவ்வாறு செய்வது வீட்டில் செல்வ இழப்பு, நிதி நெருக்கடி அல்லது வறுமையை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. அதனால்தான் வாசற்படியில் அமர்ந்து சாப்பிடும் அல்லது குடிக்கும் பழக்கத்தை பெரியவர்கள் தவிர்க்கச் சொல்கிறார்கள். இந்த மரபுக்குப் பின்னால் உள்ள நடைமுறை காரணங்கள்

மத நம்பிக்கைகளைத் தவிர, இந்த விதிக்குச் சில நடைமுறை காரணங்களும் உள்ளன.

வீட்டு வாசல் என்பது வீட்டிற்குள் நுழைவதற்கான முக்கிய வழியாகும். அங்கு யாராவது அமர்ந்திருந்தால், அது மற்றவர்களுக்கு இடையூறாக அமையும். மேலும், தடுமாறி கீழே விழும் வாய்ப்பும் உள்ளது; இது குழந்தைகள் அல்லது முதியவர்களுக்கு ஆபத்தானதாக அமையலாம். அதனால்தான் வீட்டு வாசலைத் தடையின்றி காலியாக வைத்திருப்பது ஒரு நல்ல பழக்கமாகக் கருதப்படுகிறது.

இறுதியாக, வீட்டு வாசலில் அமரக்கூடாது என்ற மரபு வெறும் மூடநம்பிக்கை மட்டுமல்ல. அதன் பின்னணியில் மத நம்பிக்கைகள், வாஸ்து கோட்பாடுகள், புராணக் கதைகள் மற்றும் நடைமுறை வாழ்க்கை முறை ஆகியவை உள்ளன. அதனால்தான், வீட்டு வாசலை மரியாதைக்குரிய இடமாகக் கருதி, அதில் அமர்வதையோ அல்லது அங்குத் தடைகளை உருவாக்குவதையோ தவிர்க்குமாறு நம் முன்னோர்கள் அறிவுறுத்தியுள்ளனர். இது வெறும் மரபு மட்டுமல்ல; வீட்டின் மங்கலத்தன்மை, ஒழுக்கம் மற்றும் வசதி ஆகியவற்றைத் தக்கவைக்கும் ஒரு வாழ்க்கை முறையாகவும் இது திகழ்கிறது.

# அரசு கேபிளில் 3 தனியார் தொலைக்காட்சிகள் ஒளிபரப்பு நிறுத்தமா?



சென்னை, ஜூன். 10–

தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பில் இருந்து 3 தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதாக தகவல்கள் பரவின. இதற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின், அண்ணாமலை, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பா.ம.க. தலைவர் அன்புமணி உள்பட பல அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து இருந்தனர்.

இது குறித்து தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பக்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பில் இருந்து 3 தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு நீக்கப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் தவறானது. இந்த 3 சேனல்களும் தொழில் நுட்ப பிரச்சினைகள் காரணத்தால் தற்காலிகமாக சில செட் ஆப் பாக்ஸ்களில் மட்டும் ஒளிபரப்பு செய்ய இயலவில்லை.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தொலைக்காட்சிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. செட் ஆப் பாக்ஸ் நிறுவனத்திற்கு வைத்திருக்கும் நிலுவை தொகை காரணமாக ஒளிபரப்பு தடை ஏற்பட்டுள்ளது என்பது தவறான தகவலாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## தலைவலி வந்தால் கவனம்!




மனித உடலின் மிக முக்கியமான பகுதி மூளை ஆகும். ஒரு சிறிய உடல்நலக் குறைவு கூட ஒருவரின் அன்றாட வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கக்கூடும். குறிப்பாக, ‘மூளைக் கட்டி’ (brain tumor) என்ற வார்த்தையே பலருக்கும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

மூளைக் கட்டி என்றால் என்ன என்பது குறித்து இயல்பாகவே அனைவருக்கும் ஒரு சந்தேகம் உள்ளது. மூளைக் கட்டி என்பது மூளையில் உள்ள செல்களின் அசாதாரணமான மற்றும் கட்டுப்பாடற்ற வளர்ச்சியாகும். இது தீங்கற்ற கட்டியாகவோ (benign tumor) அல்லது புற்றுநோயை உண்டாக்கும் வீரியமிக்க கட்டியாகவோ (malignant tumor) இருக்கலாம் என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்..

எல்லா கட்டிகளும் புற்றுநோயாக மாறுவதில்லை என்றாலும், அவை மூளையின் நுட்பமான செயல்பாட்டில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, இதை மிகவும் ஆபத்தான பிரச்சினையாகக் கருதி கவனத்துடன் சிகிச்சை பெற வேண்டும்.

இந்நோயின் அறிகுறிகள் ஆரம்பக் கட்டத்தில் மிகவும் சாதாரண உடல்நலப் பிரச்சினைகளைப் போலவே தோன்றும். அதனால்தான் பெரும்பாலான மக்கள் அவற்றை அலட்சியப்படுத்தி, இறுதியில் தீவிரமான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மீண்டும் மீண்டும் ஏற்படும் தாங்க முடியாத தலைவலி மற்றும் காரணமற்ற தலைச்சுற்றல் ஆகியவற்றை மூளைக் கட்டியின் முதன்மை அறிகுறிகளாகக் கருத வேண்டும்.

பார்வையில் திடீர் மற்றும் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படுவதும், மங்கலான பார்வை தெரிவதும் இந்நோயின் ஆரம்பக்கட்ட எச்சரிக்கை அறிகுறிகளில் ஒன்றாகும் என்று மருத்துவ நிபுணர்கள் தெளிவாகக் கூறுகின்றனர்.

நோயாளியிடம் காணப்படும் வேறு சில தீவிர அறிகுறிகளையும் நாம் எளிதாக அடையாளம் காண முடியும். மறதி அதிகரித்தல், பேசும்போது திக்குவாய் அல்லது தடுமாற்றம் ஏற்படுதல் மற்றும் சரியான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேச முடியாமை ஆகியவை இதில் குறிப்பிடத்தக்கவை. உடலின் எந்தப் பகுதியிலோ அல்லது உறுப்புகளிலோ திடீரென ஏற்படும் கடுமையான பலவீனம், திடீர் மயக்கம் போன்றவை மூளைக் கட்டியின் மிக முக்கியமான அறிகுறிகளாகும். இத்தகைய உடல்நலப் பிரச்சினைகள் நீண்ட காலம் நீடித்தால், தாமதிக்காமல் உடனடியாக நரம்பியல் நிபுணரை (neurologist) அணுக வேண்டும்.

நவீன மருத்துவத்தின் வியக்கத்தக்க தொழில்நுட்ப வளர்ச்சியால், இப்போது ஆரம்பக் கட்டத்திலேயே மூளைக் கட்டியைத் துல்லியமாகக் கண்டறிவது மிகவும் எளிதாகிவிட்டது. MRI, CT ஸ்கேன் மற்றும் பயாப்ஸி (bi–opsy) போன்ற அதிநவீன பரிசோதனைகள் இப்போது எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. நோயை எவ்வளவு விரைவாகக் கண்டறிகிறோமோ, அந்தளவுக்குச் சிகிச்சை வெற்றிகரமாக அமைவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்..

சரியான நேரத்தில் நோயைக் கண்டறிந்து துல்லியமாகப் பரிசோதிப்பது நோயாளியின் உயிரைக் காப்பாற்ற உதவும் என்றும் அவர் தெரிவித்தார். தற்போது, மூளைக் கட்டிகளைக் குணப்படுத்த மருத்துவத் துறையில் சிறந்த சிகிச்சை முறைகள் உள்ளன. அறுவை சிகிச்சை, கதிர்வீச்சு சிகிச்சை (radiation therapy) மற்றும் கீமோதெரபி போன்ற நவீன முறைகள் மூலம், பல நோயாளிகள் இந்நோயிலிருந்து மீண்டு மீண்டும் இயல்பு வாழ்க்கையை வாழ்கின்றனர். இந்த நோய்க்கான துல்லியமான காரணங்கள் இன்னும் முழுமையாக அறியப்படவில்லை. எனவே, ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுதல், சத்துக்கள் நிறைந்த சமச்சீரான உணவை உட்கொள்ளுதல், தொடர்ந்து உடற்பயிற்சி செய்தல் மற்றும் மன அழுத்தத்தைத் தவிர்த்தல் ஆகியவை ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

மூளைக் கட்டி பற்றிக் கேள்விப்படும்போது தேவையற்ற அச்சமோ பதற்றமோ அடையத் தேவையில்லை என்று மருத்துவர் ஹேமந்த் குமார் நோயாளிகளுக்கு உறுதியளிக்கிறார். இருப்பினும், இந்த நோயின் அறிகுறிகளை அலட்சியப்படுத்தாமல், சரியான நேரத்தில் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு தகுந்த சிகிச்சையைப் பெறுவது மிகவும் முக்கியம். இந்நோய் குறித்த முழுமையான விழிப்புணர்வை முன்கூட்டியே பெறுதல், ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மற்றும் மருத்துவர்களின் மேற்பார்வையில் முறையான சிகிச்சையைப் பெறுதல் ஆகியவற்றின் மூலம், பல நோயாளிகளின் உயிரைப் பாதுகாப்பதோடு அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும்.

# K9 வஜ்ரா பீரங்கிகளை தயாரிக்க பாதுகாப்புத் துறைக்கு இந்திய ராணுவம் கோரிக்கை!



புதுடெல்லி, ஜூன். 10–

இந்திய ராணுவத்தில் பல தசாப்தங்களில் இல்லாத அளவுக்கு மிகப்பெரிய பீரங்கிப் படையை நவீனமயமாக்கும் திட்டங்கள் தயாராகி வருகின்றன.

இந்நிலையில் மேற்கு முனை மற்றும் சீனாவுடனான கட்டுப்பாட்டுக் கோடு (LAC) ஆகிய இரண்டிலும் தொலைதூரத் தாக்குதல் திறனை வலுப்படுத்துவதில் இந்திய ராணுவம் பாதுகாப்பு விரிவாக்கத்தை திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கூடுதலாக சுமார் 23,000 கோடி ரூபாய் மதிப்பில் 300–க்கும் மேற்பட்ட K9 வஜ்ரா தானியங்கி ஹோவிட்சர் பீரங்கிகளை கொள்முதல் செய்ய ஒப்புதல் கோரியுள்ளது.

மேலும் இந்த திட்டத்தின் முன்மொழிவுகளை பாதுகாப்பு கொள்முதல் வாரியத்தின் டிபிபியிடம் இந்த வாரத்தில் இந்திய ராணுவம் கோரிக்கையாக வைக்கப்படவுள்ளது.

அவ்வகையில், தென்கொரியாவின் முன்னணி பாதுகாப்பு நிறுவனமான ஹன்வா ஏரோஸ்பேஸுடனான தொழில்நுட்பக் கூட்டாண்மையின் கீழ் இந்தியாவில் கே9 வஜ்ரா–டி ஏவுகணையைத் தயாரிக்கும் லார்சன் & டூப்ரோ (எல்&டி) நிறுவனத்திற்கு இந்த ஒப்பந்தம் வழங்கப்படும்.

இதன் மூலம் இந்திய ராணுவத்தின் பீரங்கிகளின் மொத்த இருப்பு எண்ணிக்கை 500–க்கும் அதிகமாக உயரவுள்ளது.

முன்னதாக சுமார் 4,500 கோடி ரூபாய் மதிப்பில் 100 கே9 வஜ்ரா துப்பாக்கிகளுக்கான முதல் ஒப்பந்தத்தில் இந்தியா 2017–ஆம் ஆண்டு கையெழுத்திட்டது.

# சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் 6 முக்கிய பணிகள்...!




சென்னை, ஜூன். 10–

முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்றவுடன், குழந்தைகள், பெண்கள் பாதுகாப்புக்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை உருவாக்கப்படும் என்று அறிவித்தார். இதைத்தொடர்ந்து, இந்த அதிரடிப்படையின் முதல் பெண் ஐ.ஜி.யாக பவானீஸ்வரி நியமிக்கப்பட்டு உள்ளார். இந்த படையில் ஒரு போலீஸ் சூப்பிரண்டு, 2 துணை போலீஸ் சூப்பிரண்டுகள் மற்றும் 4 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 30–க்கும் மேற்பட்ட போலீசார் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த அதிரடிப்படையில் இடம்பெறும் பெண் போலீஸ் மற்றும் பெண் சப்–இன்ஸ்பெக்டர்களுக்கு நீல நிற சட்டை, காக்கி நிற பேண்ட் என சிறப்பு சீருடை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கருப்பு நிற தொப்பியும், கருப்பு நிற ஷூவும் வழங்கப்பட்டுள்ளது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை கடந்த 29–ந்தேதி அன்று முதல்–அமைச்சர் விஜய் தொடங்கி வைப்பதாக இருந்தது. ஆனால் நிர்வாக காரணங்களுக்காக கடைசி நேரத்தில் இந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை முதல்–அமைச்சர் விஜய் மாலை 5 மணிக்கு சென்னை ராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் தொடங்கி வைத்தார். சென்னையில் 12 சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் ரோந்து பணியில் ஈடுபட உள்ளனர்.

இதற்காக போலீஸ் கமிஷனர் அமல்ராஜ் சென்னை மாநகர் முழுவதும் காவல் மாவட்டம் வாரியாக பெண் காவலர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி ஒவ்வொரு மண்டல வாரியாக மேற்பார்வை அதிகாரிகளாக உதவி கமிஷனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மண்டல கண்காணிப்பு அதிகாரியாக உதவி கமிஷனர் முருகேசன், மேற்கு மண்டல அதிகாரியாக உதவி கமிஷனர் ரமேஷ், கிழக்கு மண்டல அதிகாரியாக உதவி கமிஷனர் மணிமேகலை ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

1) பூக்கடை பகுதிக்கு சிறப்பு சப்–இன்ஸ்பெக்டர்கள் லட்சுமி, முத்து மற்றும் பெண் காவலர்கள் லலிதாம்பிகா, ஓவியா, சுதா, கார்த்திகா ஆகியோர் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில் இடம்பெற்றுள்ளனர்.

2) வண்ணாரப்பேட்டை பகுதிக்கு சப்–இன்ஸ்பெக்டர்கள் கிரிஜா, தரணி மற்றும் காவலர்கள் பிரியா, விஜி,கவுரி, சிவரஞ்சனி.

3) புளியந்தோப்பு பகுதிக்கு சப்–இன்ஸ்பெக்டர்கள் மணிமேகலை, லதா மற்றும் காவலர்கள் கிருஷ்ணவேணி, தீபிகா, ஆஷா, ராஜலட்சுமி ஆகியோரும் பணியில் இருப்பார்கள்.

4) அடையாறு– சப்–இன்ஸ்பெக்டர்கள் காயத்ரி, ராஜலட்சுமி, பெண் காவலர்கள் ரூபிணி, கலைச்செல்வி, அனந்த கவிதா, அனந்த குமாரி.

5) தி.நகர் – சப்–இன்ஸ்பெக்டர்கள் வாசுகி, ராஜேஸ்வரி, காவலர்கள் பிரிபா, பிரியா, விஷ்ணு பிரியா, அருணா தேவி.

6) பரங்கி மலை– சப்–இன்ஸ்பெக்டர்கள், ஜனனி, வள்ளியம்மை, காவலர்கள் பிரிய தர்ஷினி, பிரீத்தி, உமாதேவி, வசந்தா.

7) அண்ணாநகர்– சப்–இன்ஸ்பெக்டர்கள் சுப்பு லட்சுமி, கோமதி, காவலர்கள் பாரதி, ஜெனீத் ஜான்சி, திலகவதி, கவுசல்யா,


80 கொளத்தூர்– சப்–இன்ஸ்பெக்டர்கள் மீனாட்சி, உமா காவலர்கள், மேகனா, சுதா, முனியம்மாள், லீலா.

9) கோயம்பேடு– சப்–இன்ஸ்பெக்டர்கள் சத்தியா, சுஜாதா, காவலர்கள், அகிலா, புவனேஸ்வரி, சாமந்தி, அஞ்சலராணி.

10) திருவல்லிக்கேணி – சப் –இன்ஸ்பெக்டர்கள் தாரா, ஆனந்தி, காவலர்கள், மலர்க்கொடி, முத்துலட்சுமி சுபா, பூங்காவனம்.

11) மயிலாப்பூர்– சப்–இன்ஸ்பெக்டர்கள் ஜெயந்தி, சரஸ்வதி, காவலர்கள் ஆரோக்கியமேரி, பவித்ரா, சதீஷ்குமாரி, சிந்து.

12) கீழ்பாக்கம்– சப்–இன்ஸ்பெக்டர்கள் ராஜேஸ்வரி, பெனசிர் பேகம், காவலர்கள் ஆஷா, பாண்டீஸ்வரி, தீபிகா, சங்கீதா ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.



## சினிமா துளிகள்..!

## இயக்குநர் இமயம் பாரதிராஜா காலமானார்!



‘16 வயதினிலே’ என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் பாரதி ராஜா. அவரது முதல் படத்திலேயே ரஜினி, கமல், ஸ்ரீதேவி என முன்னணி நடிகர், நடிகைகளை வைத்து படத்தை இயக்கினார்.

தொடர்ந்து பல படங்களை இயக்கிய பாரதிராஜா ராதிகா, ராதா, கார்த்திக் உட்பட பல முன்னணி நடிகர், நடிகைகளை அறிமுகம் செய்த பெருமை இவரை சாரும்.

முதல் மரியாதை, கிழக்கே போகும் ரெயில், அலைகள் ஓய்வதில்லை உட்பட பல வெற்றி படங்களை இயக்கியிருக்கிறார். இயக்குனராக மட்டுமல்லாமல் நடிகராகவும் படங்களில் நடித்துள்ளார்.

திருச்சிற்றம்பலம் படத்தில் தனுஷிற்கு தாத்தா கேரக்டரில் நடித்திருந்தார். தொடர்ந்து பல படங்களில் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்துள்ளார்.

அவரது ஒரே மகனும் நடிகரும் இயக்குனருமான மனோஜ் பாரதிராஜா உயிரிழந்தது பாரதிராஜாவை மிகவும் நிலைகுலைய செய்தது.

மகனின் இழப்பிலிருந்து மீள முடியாமல் தவித்து வந்த அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டதால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இதற்கிடையே மீண்டும் அவருக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டது. அதனையடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. ராதிகா உள்ளிட்டோர் நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்தனர்.

இதற்கிடையே பாரதிராஜாவுக்கு மீண்டும் திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் உடல்நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வந்த பாரதிராஜா (84) சிகிச்சை பலனின்றி காலமானார். நீலாங்கரையில் உள்ள இல்லத்தில் இயக்குநரும் நடிகருமான பாரதிராஜாவின் உயிர் பிரிந்தது. அவரது மறைவையடுத்து திரைப்பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

## அதிரடியாக குறைந்த தங்கம், வெள்ளி விலை!



சென்னை, ஜூன். 10–

சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.3,200 குறைந்து ரூ.1,10,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.400 குறைந்து ரூ.13,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி
டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881




# வேலை வாய்ப்பு

## அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம்; 10 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: CSIR NIIST தேசிய இடைநிலை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (National Institute For Interdisciplinary Science and Technology)

அறிவிப்பு எண்: PA/09/2026
பணி வகை: மத்திய அரசுப் பணிகள்
பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப்பணியிடங்கள்: 10 (Project Associate I)
பணியிடம்: திருவனந்தபுரம்
நேர்காணல் தேதி: 23.06.2026
விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.niist.res.in/

## “திருப்பூர் மாவட்ட நலவாழ்வு சங்கம்” 97 காலியிடங்கள்!





நிறுவனத்தின் பெயர்: திருப்பூர் மாவட்ட சுகாதாரச் சங்கம்
பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்
பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப்பணியிடங்கள்: 97 (மருத்துவமனைப் பணியாளர், செவிலியர் / MLHP, பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் (சுகாதார ஆய்வாளர் நிலை II), கணக்கு உதவியாளர், ஆய்வகத் தொழில்நுட்புநர் (நிலை III), ஆலோசகர், பல் மருத்துவர், இயன்முறை சிகிச்சையாளர், செவித்திறன் நிபுணர் (Audiologist & Speech Therapist), ஆடியோமெட்ரி நிபுணர்/உதவியாளர், செவித்திறன் மற்றும் பேச்சு மொழி நிபுணர், ஆரம்பக்கட்ட தலையீட்டு நிபுணர் சிறப்பு கல்வியாளர் சமூகப் பணியாளர், தொழில்சார் சிகிச்சையாளர், அறுவை சிகிச்சை அறை (OT) தொழில்நுட்புநர் / உதவியாளர்)
பணிபுரியும் இடம்: திருப்பூர்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 06.06.2026
விண்ணப்பிக்கக் கடைசி தேதி: 29.06.2026 அன்று மாலை 05.00 மணி வரை
விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://tiruppur.nic.in/

## “தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், திருப்பூர்” 120 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்
பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப்பணியிடங்கள்: 120 (சமூக வங்கி ஒருங்கிணைப்பாளர் பணியிடங்கள்)
பணியிடம்: ஈரோடு
விண்ணப்பிக்கத் தொடங்கும் தேதி: 29.05.2026
விண்ணப்பிக்கக் கடைசித் தேதி: 15.06.2026
விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://Erode.nic.in/

## “கோயம்புத்தூர் மாவட்ட சுகாதாரச் சங்கம்” 152 காலியிடங்கள்!




நிறுவனத்தின் பெயர்: மாவட்ட சுகாதார சங்கம், கோயம்புத்தூர்
பணி வகை: தமிழ்நாடு அரசுப் பணிகள்
பணி அமைப்பு: ஒப்பந்த அடிப்படையில்
மொத்த காலிப்பணியிடங்கள்: 152 (மருத்துவ அலுவலர், சுகாதார ஆய்வாளர் நிலை–II, செவிலியர், ULB–UHN, சுகாதார ஆய்வாளர் நிலை–II (MTM), துப்புரவுப் பணியாளர், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர், பல் மருத்துவத் தொழில்நுட்புநர், கண் பரிசோதகர், இடைநிலை சுகாதாரப் பணியாளர், தரவு மேலாளர், திட்ட நிர்வாக உதவியாளர், தொழில்சார் சிகிச்சையாளர், சுகாதாரப் பணியாளர் (SNCU), CEmONC பாதுகாப்புப் பணியாளர்)
பணிபுரியும் இடம்: கோயம்புத்தூர்
விண்ணப்பம் தொடங்கும் தேதி: 22.05.2026
விண்ணப்பிக்கக் கடைசி தேதி: 15.06.2026
விண்ணப்பிக்கும் முறை: நேரடி முறை (Offline)
அதிகாரப்பூர்வ இணையதளம்: https://coimbatore.nic.in/

### K.அத்திக்கோம்பை ஊராட்சியில்

## மழையில் நனைந்து 100-க்கும் மேற்பட்ட சிமெண்ட் மூட்டைகள் நாசம்!




ஒட்டன்சத்திரம், ஜூன் . 10–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியதிற்கு உட்பட்ட K.அத்திக்கோம்பை ஊராட்சியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பணி நிறைவு செய்து பயன்பாட்டிற்கு தயாரான நிலையில் உள்ளது.

இந்த மேல்நிலை நீர்தேக்க தொட்டி பணி நிறைவடைந்த பின்பு மீதமுள்ள 100க்கும் மேற்பட்ட சிமெண்ட் மூட்டைகளை பாதுகாக்காமல் மழையில் நனைந்து வீணாகி இருப்பது அரசுக்கு இழப்பை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக 100 க்கும் மேற்பட்ட சிமெண்ட் மூட்டைகள் அத்திக்கோம்பை ஊராட்சி அலுவலகம் முன்பாக இருந்தும் ஊராட்சி செயலர் கண்டும் காணாமல் நனையவிட்டதாக ஊர் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பொதுமக்கள் பலர் இதுசம்பந்தமாக ஊராட்சி செயலரிடம் கூறியும் இது ஒப்பந்ததாரர்கள் தான் பாதுகாக்க வேண்டும். இது எங்கள் பணி இல்லை என்று அலட்சியமாக பதில் கூறி இதை வீணடித்ததாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

உடனடியாக மாவட்ட நிர்வாகமும் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்களும் நடவடிக்கை எடுத்து மேலும் அரசுக்கு இது போன்ற பொருட்சேதங்கள் நடைபெறாதபடி பாதுகாக்க உறுதி செய்ய சமூக ஆர்வலரும் பொதுமக்களும் கோரிக்கை வைக்கின்றனர்.



நெடுஞ்சாலைத்துறை பேரிடர் உபகரணங்கள், கலெக்டர் ஆய்வு தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் தேனி நெடுஞ்சாலைத்துறை சார்பில் தேனி கோட்டப்பொறியாளர் அலுவலக வளாகத்தில் பேரிடர் காலங்களில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## அதிமுக 6-வது வார்டு செயலாளர் ராஜேஷ்குமார் தவெகவில் இணைந்தார்

திருப்பூர், ஜூன் 10–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக திருப்பூர் மாநகர் மாவட்ட தொட்டிபாளையம் பகுதி கழகத்திற்கு உட்பட்ட 6.வது வார்டு செயலாளர் ராஜேஷ்குமார் அவர்கள்



தனது ஆதரவாளர்களுடன் தமிழக வெற்றிக் கழகத்தின் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் திருப்பூர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் பாலமுருகன் எம்எல்ஏ தலைமையில் தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர் அவருடன் 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். உடன் தமிழக வெற்றி கழகம் சார்பில் மாவட்ட இணைச் செயலாளர் சுகுமார், பகுதி செயலாளர் தமிழ் காபி சரத்.6.வார்டு செயளாலர் சண்முகம்.மற்றும் வார்டு இணை செயலாளர் மகேந்திரன் உள்ளிட்டோர் இருந்தனர்...


## பிறந்தநாள் வாழ்த்துக்கள்...!



R.C.சீனிவாசன்

10.06.2026

**வானவில்லின் வண்ணங்கள் வாழ்வில் என்றும் தொடரட்டும்!**
**நீங்கள் காணும் கனவுகள் நிஜமாகி என்றும் மலரட்டும்!**
**இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்!**

...பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கும் நல் உள்ளங்கள்...

JK Public Relations ஊழியர்கள்


## ஈரான் போர் 2.0: ஈரான் மீது புதிய தாக்குதலை நடத்திய அமெரிக்கா..! இதுக்கு இல்லையா சார் ஒரு எண்ட்..!



ஈரான், ஜூன். 10–

பிப்ரவரி 28ஆம் தேதி முதல் உலகமே அதிகமாக பேசியது ஈரான் போர் பற்றி தான். ஈரான் போர் அந்த ஒரு நாட்டில் மட்டுமில்லாமல் பெரும்பாலான் ஆசிய நாடுகளிலும் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈரான் போரின் வலிகளை ஒவ்வொரு நாளும் பெட்ரோ, டீசல் விலை உயர்வு, கேஸ் விலை உயர்வு என நாம் அனுபவித்து வருகிறோம். எப்போது தான் போர் முடிவுக்கு வந்து இயல்பு நிலை திரும்பும் என அனைவரும் எதிர்ப்பார்க்கும் சூழலில் மீண்டும் ஒரு முறை அமெரிக்கா தாக்குதலை தீவிரப்படுத்தி இருக்கிறது. ஹார்முஸ் நீரிணையில் அமெரிக்காவின் அப்பாச்சி ஹெலிகாப்டர் சுட்டுவீழ்த்தப்பட்டதை அடுத்து, ஈரான் மீது அமெரிக்கா புதிய தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதனால் மத்திய கிழக்கில் ஏற்கனவே நிலவி வரும் பதற்றமான சூழ்நிலை மேலும் அதிகரித்துள்ளது. ஹார்முஸ் நீரிணையில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க ராணுவத்தின் அப்பாச்சி ஹெலிகாப்டரை ஈரான் சுட்டு வீழ்த்தியது. இதற்கு பதிலடியாக, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவின் பேரில், அமெரிக்கப் படைகள் ஈரான் மீது வான்வழித் தாக்குதல்களைத் தொடங்கியுள்ளன. இந்தத் தாக்குதல் குறித்துப் பேசிய அதிபர் டிரம்ப், “ஈரானின் நியாயமற்ற ஆக்கிரமிப்புக்கு இந்தத் தாக்குதல் ஒரு மிக வலுவான மற்றும் சக்தி வாய்ந்த பதிலடி” என கூறினார். ஹார்முஸ் நீரிணையில் உள்ள ஈரானின் கெஷ்ம் தீவு மற்றும் சிரிக் துறைமுக நகரம் ஆகிய இடங்களில் அமெரிக்காவின் ஏவுகணைகள் தாக்கியுள்ளதாக ஈரானிய ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. மேலும், பந்தர் அப்பாஸ் மற்றும் ஜாஸ்க் ஆகிய பகுதிகளுக்கு அருகிலும் குண்டு வெடிப்பு சத்தம் கேட்டதாம். ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ரேடார் தளங்களை குறி வைத்து அமெரிக்கா இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையே ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தனது எக்ஸ் தளத்தில், எந்தவொரு தாக்குதலோ அல்லது அச்சுறுத்தலோ பதிலடி கொடுக்கப்படாமல் விடப்படாது என கடுமையாக எச்சரித்துள்ளார். கடந்த ஏப்ரல் மாத தொடக்கத்தில் இருந்து அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஒரு தற்காலிக போர்நிறுத்தம் அமலில் இருந்தது. இரு நாடுகளும் ஒரு நிரந்தர அமைதி ஒப்பந்தத்தை நோக்கி நகர்ந்து வந்தன. ஆனால், தற்போதைய ஹெலிகாப்டர் தாக்குதலும் அமெரிக்காவின் பதில் தாக்குதல்களும் இந்த அமைதிப் பேச்சுவார்த்தையை மேலும் பாதிக்கும் என அஞ்சப்படுகிறது.

## திருப்பூர் ஆவின் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு ஜூன் 15-ல் நேர்முகத் தேர்வு!

திருப்பூர், ஜூன். 10–

திருப்பூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் (ஆவின்) சார்பில் VETERINARY CONSULTANT (3 POSTS)பணியிடங்களை நிரப்புவதற்காக நேர்முகத் தேர்வு (Walk–in Interview) நடத்தப்பட உள்ளது. இந்த நேர்முகத் தேர்வு 15.06.2026 அன்று 11.00 a.m நடைபெறுகிறது. தகுதியும் அனுபவமும் உள்ள விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ்கள், அனுபவச் சான்றுகள் மற்றும் தேவையான ஆவணங்களுடன் நேரடியாக பங்கேற்கலாம். பணியிடங்கள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பு, கல்வித் தகுதி, ஊதிய விவரம் உள்ளிட்ட தகவல்கள் ஆவின் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. வேலை தேடும் இளைஞர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.. மேலும் விவரங்களுக்கு ஆவின் அலுவலகம் அல்லது அதிகாரப்பூர்வ அறிவிப்பை அணுகலாம். இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பு மாவட்ட இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## திரைப்பட இயக்குநர் இமயம் பாரதிராஜா மறைவு: தலைவர்கள் இரங்கல்...!



சென்னை, ஜூன். 10–

திரைப்பட இயக்குநர் இமயம் பாரதிராஜா மறைவையொட்டி, முன்னாள் முதல்வரும், திமுக தலைவருகமான மு.க. ஸ்டாலின், எடப்பாடி உள்பட பல்வேறு அரசியல் தலைவர்கள் புதன்கிழமை இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**திமுக தலைவர் ஸ்டாலின் இரங்கல்**

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், தமிழ்த் திரையுலகின் பாதையை மாற்றியமைத்து, புதுப்போக்கினை உருவாக்கிய ‘இயக்குநர் இமயம்’பார திராஜாவின் மறைவு பெரும் வேதனை யைத் தருகிறது. தமிழ்த்திரையுலகிற்குப் பேரிழப்பாகிவிட்ட அந்தப் பெருங்கலைஞனின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரைமொழியில் தனிமொழி பேசித் தனிச் சகாப்தத்தையே உருவாக்கியவர் பாரதிராஜா. ஸ்டுடியோக்களுக்குள் அடைபட்டிருந்த கேமராக்கள் பாரதிராஜா அவர்களால் கிராமங்களுக்குள் நுழைந்தன. கிராமத்து மனிதர்களையும் அவர்களது வாழ்க்கையையும் திரைக்குக் கொண்டு வந்து தமிழ்ச்சினிமாவை யதார்த்தத்திற்கு மிக அருகில் கொண்டு சென்றார். 16 வயதினிலே, கிழக்கே போகும் ரயில், சிகப்பு ரோஜாக்கள், அலைகள் ஓய்வதில்லை, டிக் டிக் டிக், முதல் மரியாதை, கடலோரக் கவிதைகள், வேதம் புதிது, கருத்தம்மா உள்ளிட்ட அவரது படைப்புகளைத் தமிழ்ச்சினிமாவின் வரலாற்றை எழுதும் எவர் ஒருவரும் தவிர்க்க முடியாது. தனது படைப்பாற்றலின் வழியாகப் பிற மொழிகளிலும் படங்களை இயக்கி, அங்கும் தன் முத்திரையைப் பதித்த அவரை இந்தியத் திரை வரலாறு என்றைக்கும் உச்சத்தில் வைத்து நினைவுகூரும்!

தலைவர் கலைஞர் மீது மிகுந்த பாசம் கொண்டிருந்தவர். தமிழ் மீதும் தமிழினத்தின் மீதும் பற்றுகொண்டு, தமிழ்நாட்டின் உரிமைகள் தொடர்பான போராட்டங்களில் திரையுலகை ஈடுபடுத்தியதில் பாரதிராஜா அவர்களுக்கு மிகப்பெரிய பங்களிப்பு உண்டு.

‘இயக்குநர் இமயம்’ பாரதிராஜா – ‘இசைஞானி’ இளையராஜா – ‘கவிப்பேரரசு’ வைரமுத்து ஆகியோரது கூட்டணியில் உருவான பாடல்கள் ஒவ்வொரு நிமிடமும் தமிழ்நாட்டின் ஏதோ ஒரு மூலையில் ஒலித்துக்கொண்டும், ஆயிரக்கணக்கான மக்களை மகிழ்வித்துக்கொண்டும்தான் இருக்கின்றன.

அவரது உடல்நலன் குறித்து விசாரிக்கவும், அவரது மகன் மனோஜ் பாரதிராஜாவின் மறைவுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறவும் பாரதிராஜாவை சந்தித்து உரையாடிய தருணங்களைத் தற்போது நினைக்கையில் நெஞ்சம் மேலும் பாரமடைகிறது. பாரதிராஜாவின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரையுலகைச் சேர்ந்த கலைஞர்களுக்கும், பாரதிராஜாவின் மாணவர்களுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அல்லிநகரத்தில் பிறந்து, அழியாத படைப்புகளைக் கொடுத்த ‘இயக்குநர் இமயம்’ பாரதிராஜா, சினிமா ரசிகர்களின் மனங்களில் – தமிழ் மக்களின் மனங்களில் என்றும் வாழ்வார்!

**அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி**

இயக்குநர் இமயம் பத்மஸ்ரீ பாரதிராஜா காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த துயருற்றேன்.

தென் தமிழகத்தின் கிராமத்தில் இருந்து புறப்பட்டு, தமிழ் சினிமாவின் கேமராவை கிராமங்களை நோக்கி திருப்பியவர்; திரைத் துறையை மண் வாசனையால் நிரப்பியவர்; தமிழ் சினிமாவை தமிழ் மண்ணுக்குரிய விழுமியங்களோடு உலகம் திரும்பிப் பார்க்கச் செய்தவர் பாரதிராஜா.

அவர்தம் மறைவு என்பது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

“என் இனிய தமிழ் மக்களே” என்ற அவரது குரல் சினிமா உள்ளவரை நிலைத்து நிற்கும்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், திரைத் துறையினருக்கும், ரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த பாரதிராஜாவின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.









உடல் நலக்குறைவால் காலமான இயக்குநர் இமயம் பாரதிராஜா இல்லத்திற்கு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், நடிகர்கள் ரஜினிகாந்த், கங்கை அமரன், சூர்யா, சிவக்குமார், ராதிகா, சுகன்யா உள்ளிட்டோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020